*14*

# கர்த்தருடைய வருகை பற்றிய வாக்குத்தத்தத்தை நினைவில் வைத்திருங்கள் (2 பேதுரு 3:1–18)

*இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு அவரை, அவரது சீஷர்கள் ஒலிவ மலையில் சந்தித்த போது, தாங்கள் எதிர்பார்க்க வேண்டியது என்ன என்பது பற்றி அவர்கள் சிறிதளவே கருத்துக் கொண்டிருந்தனர். சீஷர்கள் திகைப்புடன் கவனித்துக் கொண்டிருக்கையில், கர்த்தர் பரலோகத்தை நோக்கி எழத் தொடங்கினார். அவர்களுக்கு அருகில், வெண்ணாடை அணிந் திருந்த இரு மனிதர்கள் தோன்றினர் என்று லூக்கா பதிவுசெய்துள்ளார். அவர்கள், "உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்" என்று கூறினர் (நடபடிகள் 1:11). வெண்ணாடை அணிந்திருந்த மனிதர்கள் அந்த வாக்குறுதியை ஏற்படுத்தியதால், கர்த்தருடைய மறுவருகையின் காலம் மற்றும் அதன் வகை ஆகியவற்றைக் காட்டிலும் வேறுசில பாடக்கருத்துக்களே அதிக ஆர்வம் அல்லது கருத்து வேறுபாட்டைத் தூண்டியுள்ளன. புதிய ஏற்பாடு எழுதப்பட்டுக் கொண்டிருந்தபோதே, தெசலோனிக்கேயருக்குப் பவுலின் நிருபத்தில் போன்று, இது உண்மையாக இருந்தது. தெசலோனிக்கே நகரில் இருந்த சபையில், அவரது மறுவருகை பற்றிய யூகமானது, சிலரை வேலை செய்தலை நிறுத்தி அவர் தரிசன மாகும் வரையில் சோம்பேறிகளாகக் காலத்தைக் கடத்த வழிநடத்தி இருந்தன (1 தெசலோனிக்கேயர் 5:1-3; 2 தெசலோனிக்கேயர் 2:1, 2; 3:6-12).*

*அவரது இரண்டாம் வருகை பற்றிய யூகங்களும் கருத்து வேறுபாடுகளும் இன்று வரையில் தொடர்ந்துள்ளன. கடந்த நூற்றாண்டில் பல சபைகளில், ஆயிரம் ஆண்டு முன் அரசாட்சிக் கொள்கையின் பல்வேறு வடிவங்கள் போதிக்கப்பட்டுள்ளன. வல்லுநர்கள் சிக்கலான கால அட்டவணைகளைக் கையில் வைத்துக் கொண்டு, பரவசநிலை, அர்மெகதோன் யுத்தம், தேவாலயம் திரும்பவும் கட்டுப்படுதல் மற்றும் இவைபோன்ற தலைப்புகளைப் பற்றிக் கலந்துரையாடுகின்றனர். கடைசிக் காலங்கள் பற்றிக் கூறும் மிகச் சிறப்பாக விற்பனையாகும் புத்தகங்கள், திரைப்படங்கள் மற்றும் பேருரைகள், கர்த்தருடைய மறுவருகையில் நிலவுகிற வலிவார்ந்த ஆர்வம் - ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்து இருந்துள்ள ஒரு ஆர்வம் - பற்றி சாட்சி அளிக்கின்றன.*

*2 பேதுரு நிருபத்தில் அப்போஸ்தலர் தமது வாசகர்களுக்கு, கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பற்றிப் போதித்தார். அவர் திரும்பி வருவாரா என்று சிலர் சந்தேகப்பட்டனர். ஏளனம் செய்பவர்கள் எதிர்பாராத வேளையில், தேவபக்தி*

யற்றவர்கள் மீது நியாயத்தீர்ப்பைக் கொண்டுவருவதற்காகக் கர்த்தர் திடீரென்று தோன்றுவார் என்ற உறுதிப்பாட்டுடன் பேதுரு தமது இரண்டாவது நிருபத்தை முடித்தார்.

## ஏளனம் செய்பவர்கள் வேண்டுமென்றே மறந்துவிடுகின்றனர் (3:1-7)

பேதுரு தமது இரண்டாவது நிருபத்தில், தமது வாசகர்களை நினைவுபடுத்துமாறு தூண்டத் தாம் கொண்டிருந்த விருப்பத்தை இரண்டுமுறை முன்வைத்தார் (1:12, 13; 3:1). பொதுவான கருத்தில், இவ்விரு நிருபங்களுமே ஒவ்வொரு கிறிஸ்தவரின் "உண்மையான மனதை நினைப்பூட்ட"வே எழுதப்பட்டன (3:1), ஆனால் தீர்க்கதரிசிகளும் அப்போஸ்தலர்களும் பேசியிருந்த குறிப்பிட்ட ஒரு விஷயத்தைப் பற்றித் தமது வாசகர்களுக்கு நினைவூட்ட அவர் விரும்பினார் (3:2). ஏனென்றால் சிலர், கேள்விகளையும் சந்தேகங்களையும் எழுப்பி இருந்ததால், கர்த்தர் மறுபடி வருதல் பற்றிச் செய்யப்பட்டிருந்த வாக்குத்தத்தமானது கிறிஸ்தவ போதனையின் அடிப்படையாக இருந்தது என்ற நினைவூட்டுதல் அவர்களுக்குத் தேவைப்பட்டது. கிறிஸ்துவின் சீஷர்கள், கர்த்தர் விரைவில் தோன்றுவார் என்ற எதிர்பார்ப்புடன் வாழ வேண்டியிருந்தனர்; அவர்கள் அதை வற்புறுத்த அல்ல, ஆனால் அதை எதிர்பார்த்திருக்க வேண்டியவர்களாக உள்ளனர். அவர் இன்னும் ஆயிரம் ஆண்டுகள் தமது வருகையை தாமதிப்பார் என்றால், அவர்கள் ஊக்கம் இழந்துபோக வேண்டியதில்லை. அவர் இன்றே தரிசனமாவார் என்பது போல் அவர்கள் வாழ்ந்துள்ளனர்.

மத்தேயு 24ல் முடியும் உவமை மற்றும் 25ல் தொடங்கும் உவமை ஆகியவற்றிற்கு இடையில் நாம், மறைவான ஆனால் முக்கியமான சிந்தனை மாற்றத்தைக் காணுகிறோம். மத்தேயு 24:45-51ல் பொல்லாத வேலைக்காரன் தனது எஜமானர் அவரது திரும்புதலைத் தாமதப்படுத்த வேண்டும் என்று எதிர்பார்த்தான். அவன் தனது களியாட்டம் மற்றும் உயர்ந்த வாழ்வு ஆகியவற்றின் இடையில் இருக்கையில், அவனது எஜமானர் திரும்பி வந்து அவனுக்கு மாய்மாலக்காரர்களுடன் இருக்க ஒரு இடத்தை நியமித்தார், "அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்" (மத்தேயு 24:51). பத்து கன்னியர் பற்றிய உவமை இதற்கு நேரெதிரானதாக உள்ளது. மதியீனமான ஐந்து கன்னியர்கள், மணமகன் விரைவில் வரவேண்டும் என்று எதிர்பார்த்தனர், ஆனால் எதிர்பார்க்கப்பட்ட வேளைக்கும் தாமதமாகவே அவர் வந்து சேர்ந்தார். 1 மற்றும் 2 பேதுரு நிருபங்களுக்கு இடையில், வலியுறுத்தத்தில் இதைப்போன்ற மாற்றம் உள்ளது. 1 பேதுரு நிருபத்தில் கர்த்தருடைய உடனடி வருகையில் எதிர்பார்த்தலானது துன்புற்ற கிறிஸ்தவர்களுக்கு ஆறுதலாக இருந்தது; 2 பேதுரு நிருபத்தில், உடனடி வருகையை எதிர்பார்த்த கிறிஸ்தவர்களின் எதிர்பார்ப்பு நிஜமாகத் தவறியிருந்ததால் சந்தேகம் வாதித்து இருந்தது.

அனேகமாக 2 பேதுரு 2ம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டுள்ள கள்ளப்போதகர்கள் "அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே?" என்று ஏளனம் செய்தவர்கள் மத்தியில் இருந்திருக்கலாம் (3:4). உலகத்தை இருக்கும்படி அழைத்த தேவன், அதை நியாயத்தீர்ப்புக்கு அழைக்கக்

கூடியவராகவும் இருந்தார் என்று அவர்களுக்குப் பேதுரு நினைவூட்டினார் (3:5). அவர் ஏற்கனவே அதை ஒரு முறை நியாயத்தீர்ப்புக்கு அழைத்திருந்தார். பெருவெள்ளமானது பழங்கால உலகத்தைச் சுத்தமாக அழித்திருந்தது. தேவனுடைய வார்த்தை நோவாவின் சந்ததியை எச்சரித்திருந்தது. அவர்கள் அதைக் கவனித்துக் கேட்க மறுத்துவிட்டனர், மற்றும் நியாயத்தீர்ப்பு வந் திருந்தது (3:6). பெருவெள்ளத்திற்கு முந்திய உலகத்தை நியாயந்தீர்த்திருந்த அதே தேவன் தற்கால உலகத்தையும் அக்கினிக்கு இரையாகும்படி வைத்திருந் தார் (3:7). அவரது வார்த்தையானது, இப்போது இருக்கிற வானங்களையும் பூமியையும், “தேவபக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்துபோகும் நாள்வரைக்கும்” காத்துக்கொண்டுள்ளது (3:7).

## கர்த்தர் பொறுமையுள்ளவராயிருக்கிறார் (3:8-10)

சில வேளைகளில் நான், கர்த்தருடைய சபையானது இந்த உலகத்தின் மீது கொண்டுள்ள செயல்தாக்கம் அல்லது செயல்தாக்கக் குறைவினால் ஊக்கம் இழந்துபோகிறேன். கிறிஸ்துவின் செய்திக்குச் சில மக்களே கவனம் செலுத்துகிறவர்களாகக் காணப்படுகின்றனர். பல ஆண்களுக்கும் பெண்களுக்கும், திருமண ஒழுக்கத்திற்கு ஒப்புக்கொடுத்தல் என்பது அர்த்த மற்றதாக உள்ளது. மக்களின் மனங்கள் மற்றும் ஆத்துமாக்களுக்கான யுத்தத்தில், சாத்தான் வெற்றிபெறுவதாகத் தோன்றுகிறது. பல இலட்சக்கணக்கான மக்கள் மதுபானம் மற்றும் போதை மருந்துகளின் நிழலான உலகத்தில் வாழ்கின்றனர். ஆபாச இலக்கியமும் கருக்கலைப்பும் தாண்டவமாடுகையில், குற்றமும் மோச டியும் ஆண்டுக்கு ஆண்டு வளருகின்றன. சபையினுள்ளும்கூடப் பாவமானது தனது நீண்ட கைகளை நீட்டிள்ளது.

வற்றிப்போன இந்த நிலமுகப்பின் முன்னிலையில், 3ம் அதிகாரத்தின் செய்தி முக்கியமானதாக உள்ளது. இந்த உலகத்தின்மீது சாத்தனின் பலமும் அதிகாரமும் மாயையாக மாத்திரம் உள்ளன. இந்த உலகம் தேவனுக்கு உரியதாக உள்ளது, மற்றும் நிறைவான வெற்றி அவருடையதாகவே உள்ளது. அவரது மறுவருகைக்காக ஏங்கி அதை எதிர்பார்ப்பவர்கள், நித்தியத்திற்கும் அவருடனேகூட ஆளுகை செய்வார்கள். உலகமும் அதில் உள்ள யாவும் நியாயந்தீர்க்கப்பட்டு அக்கினியால் பட்சிக்கப்படும் (2 தெசலோனிக்கேயர் 1:6-10). அந்த நிகழ்ச்சியுடன் ஒப்பிடுகையில், நிகழ்கால உலகக் காட்சியானது யுத்தத்திற்கு முந்திய சிறுபூசல் போன்றதாக உள்ளது. அவர் தமது வருகையைத் தாமதித்தால் என்னவாகும்? பேதுரு வாழ்ந்த காலத்திற்கு நீண்டகாலம் முன்னதாகவே மோசே, “உமது பார்வைக்கு ஆயிரம் வருஷம் நேற்றுக் கழிந்த நாள்போலவும், இராச்சாமம் போலவும் இருக்கிறது” என்று கூறியிருந்தார் (சங்கீதம் 90:4; இணைவசனம் 2 பேதுரு 3:8). மனிதர்கள் தேவனை ஒரு கால அட்டவணைக்குள் பிடித்துவைக்க இயலாது. கிறிஸ்து மறுபடியும் வந்து பூமியை நியாயந்தீர்ப்பார் என்று தேவன் கூறியுள்ளார் என்றால், அவர் அதைச் செய்வார் என்று நாம் நிச்சயமாயிருக்கலாம். நியாயத்தீர்ப்பின் நாள் தாமதமாகிறது என்றால், அது அவர் தமது உலகம் மனந்திரும்புவதற்கு நேரம் அளிக்கிறதான அவரது நீடிய பொறுமையின் காரணமாகவே அவ்வாறு உள்ளது (3:9).

பேதுரு, “கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்” என்று எழுதுகையில் (3:10), பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளை

*நினைவுகூர்ந்தார். ஏசாயா, "நரரின் மேட்டிமையான கண்கள் தாழ்த்தப்படும், மனுஷரின் வீறாப்பும் தணியும்; கர்த்தர் ஒருவரே அந்நாளில் உயர்ந்திருப்பார்" என்றும் (ஏசாயா 2:11). "பூமியைத் தத்தளிக்கப்பண்ணக் கர்த்தர் எழும்பும்போது, அவருடைய பயங்கரத்திற்கும், அவருடைய மகிமைப்பிரதாபத்திற்கும் விலகி, கன்மலைகளின் கெபிகளிலும், பூமியின் குகைகளிலும் புகுந்துகொள்வார்கள்" என்று (ஏசாயா 2:19) எழுதினார். ஏசாயா 13ம் அதிகாரம், கர்த்தருடைய நாளை பாபிலோனுக்கு எதிரான நியாயத்தீர்ப்பின் நாள் என்ற வகையில் பேசுகிறது; ஏசாயா 34:8 ஏதோமுக்கு எதிராகப் பேசுகிறது. எரேமியா 46:10ம் வசனம், எகிப்து நாடு கர்த்தருடைய நாளில் தேவனுடைய கோபத்தை எதிர் கொள்ளும் என்று கூறுகிறது. ஆமோஸ் 5:18 மற்றும் செப்பனியா 1:7 ஆகிய வசனங்கள், கர்த்தரின் நாளில் தேவன் இஸ்ரவேலுக்கு எதிராகப் பழிதீர்ப்பார் என்று கூறுகின்றன. தீர்க்கதரிசிகளுக்குக் கர்த்தருடைய நாள் என்பது தேவன் நியாயத்தீர்ப்பைச் செயல்படுத்துவதன் மூலம் தம்மைப் பலம்வாய்ந்த வகையில் வெளிக்காண்பிக்கும் எந்த நாளாகவும் இருந்தது. 1 தெசலோனிக்கேயர் 5:2 மற்றும் 2 பேதுரு 3:10 ஆகிய வசனங்களில், எல்லா மக்களும் கிறிஸ்துவின் நியாயாசனத் திற்கு முன்பாகத் தோன்றும் நாள்தான் தேவனுடைய முடிவான நியாயத்தீர்ப்பின் நாளாக உள்ளது (2 கொரிந்தியர் 5:10; ரோமர் 2:6-8).*

*இயேசுவும் பவுலும் கூட, கர்த்தருடைய நாள் திருடன் வருகிறவிதமாய் வரும் என்று கூறியிருந்தனர் (மத்தேயு 24:42-44; 1 தெசலோனிக்கேயர் 5:2). கர்த்தருடைய உடனடி திரும்புதலை எதிர்பார்த்தலுக்கும் (1 பேதுரு 4:7; யாக்கோபு 5:8) அவர் ஒரு திருடனைப்போல் வருவார் என்று எதிர் பார்த்தலுக்கும் இடையில் சிறிது வேறுபாடு உள்ளது. இவ்விரு விஷயத்திலும், கர்த்தருடைய மக்கள் ஆயத்தமாகவும் எதிர்பார்த்தலின்படி வாழ வேண்டியும் உள்ளது. அவர் திரும்ப வரும்போது, அவரது பலத்த நியாயந்தீர்ப்பு நிறைவானதாகவும் முற்றானதாகவும் இருக்கும். பூமி, மேகம், கடல்கள் மற்றும் இயற்கையின் எல்லா மூலகங்களும் அழிக்கப்படும்.*

*3:10ல் உள்ள இறுதி வார்த்தைகள் கடினமானவைகளாக உள்ளன.* NASB *வேதாகமம், "அதன் கிரியைகள் எரிக்கப்படும்" என்று மொழிபெயர்க்கிறது, ஆனால்* NIV *வேதாகமம், "அதிலுள்ள ஒவ்வொரு பொருளும் வெறுமையாக விடப்படும்" என்று கூறுகிறது. இவ்விரு மொழிபெயர்ப்புக்களுக்கும் பின்னால் மாறுபட்ட இரு கிரேக்க வார்த்தைகள் உள்ளன. 2 பேதுரு நிருபத்தின் பழங்காலப் பிரதி கள் சிலவற்றில் "எரிந்துவிடும்" என்று அர்த்தப்படுகிற வார்த்தை இருக்கையில், மற்றவைகள் "கண்டறியப்படும்" என்று அர்த்தப்படுகிற வார்த்தையைக் கொண்டுள்ளன. உண்மையில் பேதுரு எந்த வார்த்தையை எழுதினார் என்று தீர்மானித்தல் கடினமாக உள்ளது, ஆனால் அவர் "கண்டறியப்படும்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருந்தால்,* NIV *வேதாகமம் அதைச் சரியாகப் புரிந்துகொண்டு உள்ளது எனலாம். கடைசி நாட்களில் ஒவ்வொரு மனிதரின் கிரியையும் "வெளியரங்கமாகும்" மற்றும் "அக்கினியால் வெளிப்படுத்தப்படும்" என்று கூறுகிற 1 கொரிந்தியர் 3:13ன் கருத்தில் கிரேக்க வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. "கண்டறியப்படும்" என்பது கண்டுபிடிக்கப்படுதல், வெளிப்படுத்தப்படுதல் அல்லது மூடாதுவிடப்படுதல் என்று அர்த்தப்பட முடியும். மற்ற மொழிபெயர்ப்புகள் இந்த நிறைவுச் சொற்றொடரை சொற்பொருள் வாதக் கேள்வியாகத் தரவழைத்துள்ளன: "பூமியும் அதில் உள்ள*

கிரியைகளும் - அவை கண்டறியப்படுமா?”

கடைசி நாளில் பூமியானது அழிக்கப்படாது ஆனால் புதுப்பிக்கப்படும் என்ற போதனையை ஆதரிப்பதற்கு சிலர் இவ்வசனப்பகுதியைப் பயன்படுத்த முயற்சி செய்துள்ளனர். சந்தர்ப்பப் பொருளானது அந்த விளக்கத்தைக் கொண்டிருக்காது. நாம் இப்போது அறிந்துள்ளவாறு இருக்கிற பூமியும் அண்டமும் கர்த்தர் வரும்போது இல்லாமற்போகும் என்று பேதுரு கூறினார். “வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்” என்ற கூற்றைப் புரிந்துகொள்வதற்கு வேறு வழி எதுவும் இல்லை.

## நீங்கள் எவ்வகைப்பட்ட மக்களாக இருக்க வேண்டும்? (3:11-18)

பேதுரு, காலத்தின் முடிவைப் பற்றிக் கிறிஸ்தவர்களுக்கு நினைவூட்டுதலினால் அவர்களின் இருதயங்களைப் பயங்கரமான எண்ணத்தைக் கொண்டு தாக்க வேண்டும் என்று நோக்கம் கொண்டிருக்கவில்லை. அவிசுவாசிகளும் தேவபக்தியற்றவர்களும் மாத்திரமே பயப்படக் காரணம் இருந்தது. பேதுருவுக்கும் அவரது வாசகர்களுக்கும், தற்கால உலக அமைவு முடிவடையும் என்று அறிதலானது, பரிசுத்தமாக மற்றும் தேவபக்தியுடன் வாழவேண்டும் என்ற அவர்களின் தீர்மானத்தைப் பலப்படுத்தவே செய்தது. “... நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்! தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள்” என்று பேதுரு கூறினார் (3:11, 12). கிறிஸ்துவின் மறுவருகை பற்றிப் பவுல் எழுதியபோது, 1 தெசலோனிக்கேயர் 5:1-5ல் அவர் இதேபோன்ற புத்திமதி ஒன்றைக் கொண்டிருந்தார். கிறிஸ்தவர்கள் தேவபக்தியுள்ள வாழ்வை வாழுதல் மூலம், எதிர்பாராத வேளையில் கர்த்தர் வந்தால் அவருக்கென்று ஆயத்தமாக இருக்கின்றனர், மற்றும் அவர்கள் அவரது தரிசனத்தின் வேளையைத் துரிதப்படுத்துகின்றனர் (அதாவது, அவர்கள் அதை எதிர்பார்ப்புடன் கண்ணோக்குகின்றனர்).

சிலர், “வானங்களும் பூமியும் அழிக்கப்பட்டால், தேவனுடைய மக்கள் எங்கே வாழ்வார்கள்?” என்று கேட்கின்றனர். விபரமற்ற விளக்கம் ஒன்றைக் கொடுக்கப் பேதுரு முயற்சி செய்தார். தேவனுடைய சர்வஞானம் மற்றும் வல்லமையில் இதற்கான பதில் மறைந்துள்ளது. தேவன், தற்போது உள்ள வானங்கள் மற்றும் பூமி ஆகியவற்றிலிருந்து முற்றிலும் வேறுபட்ட புதிய வானத்தையும் புதிய பூமியையும் கொடுப்பார் என்று அறிதல் போதுமானதாக உள்ளது. அந்த வானம் மற்றும் பூமியில், நீதி குடிகொண்டிருக்கும். பேதுருவின் கற்பனையானது, வெளிப்படுத்தின விசேஷம் 21:1-4ல் உள்ளது போன்று யோவான் கண்டு விளக்கியது போன்று சித்தரிப்பாகவும் நாடகத்துவமாகவும் இல்லாவிட்டாலும், அது தெளிவானதாக உள்ளது.

பேதுருவின் முடிவுக் குறிப்புகள், பரிசுத்த வாழ்வு பற்றிய அவரது புத்திமதிகளைத் திரும்பவும் எடுத்துரைக்கின்றன. எல்லாம் புதுப்பிக்கப்பட்டு மனித குமாரன் மகிமையுள்ள தமது அரியணையில் வீற்றிருக்கும்போது, அவருடனான வாழ்விற்குக் கிறிஸ்தவர்கள் தங்களைத் தயார் செய்துகொள்ளுதல்

அவசியமானதாக உள்ளது (மத்தேயு 19:28). கர்த்தர்தாமே, "குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டி"யாக இருக்கையில் (1 பேதுரு 1:19), கிறிஸ்தவர்கள் "கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய்" இருக்க வேண்டும் என்று பேதுரு வேண்டிக் கேட்டுக் கொண்டார் (3:14). இவ்விடத்தின் வார்த்தைகள், "கறையும் பிழையும்" கொண்ட கள்ளப்போதகர்களுக்கு நேர்மாறானதாக நோக்கம் நிறைந்த வகையில் இருக்கலாம். விசுவாசம் நிறைந்தவர்கள், அவரது மறுவருகைக்காக ஆவலுடன் காத்துக் கொண்டிருக்கையில், தாமதப்படுதல் என்பது மற்றவர்கள் சுவிசேஷத்தைக் கேள்விப்படவும், இரட்சிக்கப்படவும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் கூட்டத்தில் இணைந்து கொள்ளவும் அவர்களை அனுமதிக்கும் என்பதை நினைவுகூர வேண்டியவர்களாக இருந்தனர்.

புதிய ஏற்பாட்டின் பிற எழுத்துக்களுக்கான அதிகாரமுடைமை மற்றும் ஏவுதல் ஆகியவற்றிற்கு தனித்த ஒரு சாட்சியமானது 3:15ல் காணப்படுகிறது. நமக்குக் கிடைக்கப்பெற்ற பவுலின் முதல் நிருபமான 1 தெசலோனிக்கேயர் நிருபத்தை அவர், கி.பி. 51ம் ஆண்டுவாக்கில் எழுதினார், இது 2 பேதுரு நிருபம் எழுதப்படுவதற்கு பதினைந்து ஆண்டுகள் முன்னதாக எழுதப்பட்டிருக்கலாம். மேலும், பேதுரு இந்த நிருபத்தை எழுதியபோது, யூகிக்கப்பட்டபடி அவர் ரோமாபுரியில் இருந்திருந்தால், பவுல் அந்த நகரில் இருந்த சபைக்குத் தமது நிருபத்தைச் சுமார் எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் எழுதி இருப்பார். பவுலின் நிருபங்கள் எப்போது, எவ்வாறு மற்றும் யாரால் ஒன்றாகக் கூட்டப்பட்டன என்று நாம் அறிவதில்லை, ஆனால் 2 பேதுரு நிருபம் எழுதப்பட்டதற்கு முன்னதாகவே, பேதுருவும் அவரது வாசகர்களும் பவுலின் நிருபங்களைப் பற்றி அறிந்திருக்கலாம்.

பவுல் எழுதியிருந்தவற்றை, கல்லாதவர்களும் உறுதியில்லாதவர்களும் புரட்டுகின்றனர் என்ற பேதுருவின் கூற்றானது, பவுலின் நிருபங்களைத் தங்களின் கள்ளப்போதகத்திற்கு ஆதாரமாகப் பயன்படுத்த முயற்சி செய்ததாக 2ம் அதி காரத்தில் விவரிக்கப்பட்ட கள்ளப் போதகர்களைச் சுட்டிக் காண்பித்திருக்கச் சாத்தியக்கூறு உள்ளது. பேதுரு, தாமும் பவுலும் ஒரு பொதுவான காரணத்திற் காகச் சகோதரர்களாக இருந்ததைத் தெளிவாக்கினார். பவுல், "தனக்கு அருளப்பட்ட ஞானத்தினாலே" கர்த்தரின் நாளைப் பற்றியும் அதன்விளைவாகப் பரிசுத்தம் மற்றும் நீதி நிறைந்த வாழ்வை வாழுதலின் அவசியம் பற்றியும் எழுதி யிருந்தார் (3:15, 16).

3:15, 16ல் பேதுரு, பவுல் எழுதிய எந்த வசனப் பகுதியை அல்லது எந்த நிருபங்களை மறைமுகமாய்க் குறிப்பிட்டார் என்று கூறுவது கடினமாக உள்ளது. கொலோசெயர், எபேசியர் மற்றும் கலாத்தியர் நிருபங்கள் ஆசியா மைனர் பகுதி யில் இருந்த சபைகளுக்கு எழுதப்பட்டன. பிலிப்பியர், தெசலோனிக்கேயர் மற்றும் கொரிந்தியர் நிருபங்களை ஆசியாவில் இருந்த சபைகள் சுலபமாக அறிந்து இருக்க முடியும். மேலும், பவுல் தீமோத்தேயுவுக்கு நிருபத்தை எழுதிய போது, தீமோத்தேயு ஆசியாவில் இருந்த எபேசு நகரில் இருந்தார், மற்றும் தீத்துவுக்கு நிருபத்தை எழுதியபோது, தீத்து கிரேத்தா என்ற அருகாமைத் தீவில் இருந்தார். பேதுருவும் அவரது வாசகர்களும் குறைந்தபட்சம் பவுலின் சில நிருபங்களை அறிந்திருந்தனர் மற்றும் அவைகள் "மற்ற வேதவாக்கியங்களைப்" போலவே அதிகாரம் உடையவையாக இருந்தன என்று அறிந்திருந்தனர் என்பது

குறிப்பிடத்தக்க விஷயமாக உள்ளது. பவுலேகூட தமது வார்த்தைகள் தேவ ஆவியானவரால் தரப்பட்டிருந்ததால் அவை அதிகாரம் கொண்டு இருந்தன என்று உறுதிப்படுத்தினார் (1 கொரிந்தியர் 2:13; எபேசியர் 3:5).

துரதிர்ஷ்டவசமாக, ஒவ்வொரு காலகட்டத்திலும் உள்ள கிறிஸ்தவர்கள் "அக்கிரமக்காரருடைய வஞ்சகத்திலே இழுப்புண்டு" (3:17). போகாதபடிக்கு கவனமாக இருக்க வேண்டியதாக உள்ளது. கிறிஸ்தவர்களுக்கான அடிப்படை சத்தியங்களும், கட்டளைகளும். வாழ்வின் வழியும் அவற்றை வாசிக்க அக்கறையாக இருக்கும் எவருக்கும், புதிய ஏற்பாட்டில் உள்ளன, ஆனால் பவுல் மற்றும் புதிய ஏற்பாட்டின் பிற எழுத்தாளர்களால் எழுதப்பட்ட, "புரிந்துகொள்ளக் கடினமாக இருக்கும் விஷயங்களில்" (3:16) விசேஷித்த ஆய்வு செய்கின்றவர்களால், ஒன்றுக்கு மேற்பட்ட கிறிஸ்தவர் தமது பாதுகாப்பான நிலையில் இருந்து புறம்பே வழிநடத்தப்பட்டு இருக்கின்றனர். வேதவாக்கியங்களின் தெளிவான, பொதுவாகப் புரிந்துகொள்ளப்படக் கூடிய போதனைகளை, கடினமான மற்றும் கொஞ்சமே புரிந்துகொள்ளப்பட்டுள்ள வசனப்பகுதிகள் பற்றிய தங்கள் தனிப்பட்ட விளக்கங்களுக்கு ஆதாரமாக அமைக்கும் போதகர்களைப் பற்றிக் கிறிஸ்தவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது அவசியமாக உள்ளது. அநேக கிறிஸ்தவர்கள் தானியேலின் எழுபது வாரங்களின், சகரியாவின் இரவு தரிசனங்களின் மற்றும் வெளிப்படுத்தின விசேஷத்தின் உருவகமொழிநடையின் பாறைகள் மேல் விழுந்து நசுக்கப்பட்டிருக்கின்றனர்.

## முடிவுரை

2 பேதுரு நிருபத்தின் கடைசி அதிகாரம், கர்த்தரின் இரண்டாம் வருகை பற்றிப் புதிய ஏற்பாட்டில் உள்ள மிக அதிகமான வரைவளவையான விவரிப்புகளில் ஒன்றாக உள்ளது. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை எவ்வளவு காலம் கழித்து நிகழ்ந்தாலும், அந்தத் தாமதத்தைக் கையாளக் கிறிஸ்தவர்களுக்கு உதவும் சந்தர்ப்பப் பொருளில் பேதுரு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் மீதான நம்பிக்கையை ஜீவனுள்ளதாகக் காத்தார். அவர்கள் அவரது உடனடி மறுவருகையின் மீதான தங்கள் நம்பிக்கையை விட்டுவிட வேண்டும் என்று அவர் ஆலோசனை தெரிவிக்கவில்லை. கர்த்தருடைய வருகை விரைவில் இருக்கும் என்று எதிர்பார்த்தலே அவரது மறுவருகையை எதிர்பார்க்கும் ஒரே வழியாக உள்ளது. அவர் விரைவில் வரவேண்டும் என்று எதிர்பார்த்தலானது, ஒரு மனித கால வரம்பிற்குள் கர்த்தரைப் பொருத்தும்படி வற்புறுத்துதல் போன்று இருப்பதில்லை. கர்த்தர் திரும்பவும் வருவார் என்பதே கிறிஸ்தவ விசுவாசமாக உள்ளது.